06.04.2026

OS. No. 276 / 2018

**PW.1 – கார்த்திக்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சைக்கு தேவையான தகுதிகள் என்னவென்றால், பிரதிவாதி படித்துள்ள பட்டங்களை தவிர்த்து, அவர் கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சை செய்யும் மருத்துவமனையில் பயிற்சி எடுத்திருக்க வேண்டும் அல்லது வெளிநாட்டில் உள்ள மருத்துவமனையில் Fellowship பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு எந்தவொரு Fellowship Certificate யும் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து வாதி பெறவில்லை. நான் சொல்வதுபோல் எந்தவிதமான சிறப்பு அனுபவமும் Fellowship யும் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், பிரதிவாதி படித்த படிப்பே அதுக்கு போதுமானது என்றாலும் சரியல்ல. சிறப்பு அனுபவம் பெறுவதற்காக லண்டனில் உள்ள Kims மருத்துவமனைக்கு வாதி நிறுவனம் பிரதிவாதியை ஒரு மாதம் அனுப்பி வைத்தது. அவ்வாறு பயிற்சி அளித்ததற்கான சான்றிதழ்கள் எதுவும் கொடுத்தார்களா என்றால், சான்றிதழ் எதுவும் கொடுக்கவில்லை. ஆறு மாத பயிற்சி பெறவேண்டிய பிரதிவாதி ஒரு மாதத்திலேயே வந்துவிட்டதால் கொடுக்கவில்லை. அவ்வாறு நாங்கள்தான் Kims மருத்துவமனைக்கு பயிற்சிக்கு அனுப்பிவைத்தோம் என்பதற்கு Kims மருத்துவமனையும், வாதி நிறுவனமும் வைத்துக்கொண்ட ஆவண பரிமாற்றங்கள் எங்களிடம் உள்ளது என்றால் உள்ளது. 2014 அல்லது 2015-ஆம் வருடம் Kims மருத்துவமனையுடன் பயிற்சிக்காக வாதி தொடர்பு கொண்டிருக்கும். ../

அவ்வாறு நாங்கள் தொடர்பு கொள்வதற்கு முன்பாகவே பிரதிவாதிக்கும், Kings மருத்துவமனைக்கும் அறிமுகம் இருந்தது என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 9-இல் கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சைக்கு வாதி, பிரதிவாதியைதான் நம்பியிருந்தது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கல்வித்தகுதியை வைத்துதான் கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சைக்கு அனுமதி பெறப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி வாங்குவதற்கு Kims மருத்துவமனையில் பயிற்சி பெற்றதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பயிற்சி அளிப்பதற்காக Kims மருத்துவமனைக்கு நாங்கள் அனுப்பவில்லை என்றாலும், அதற்கு முன்பே அவருக்கு போதிய அனுபவமும், பயிற்சியும் கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சையில் உள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் நடந்த முதல் கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சை செய்ய Kims மருத்துவமனையில் இருந்து ஒன்பது மருத்துவர்கள் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு, பிரதிவாதி வாதி நிறுவனத்தில் வேலை பார்த்தவரை முப்பது கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சைகள் நடந்தது என்றால், 21 அறுவைசிகிச்சைகள் நடந்தது. முதல் அறுவைசிகிச்சைக்கு மட்டும்தான் Kims மருத்துவமனையில் இருந்து மருத்துவர்கள் வந்தார்கள் என்றாலும், அதன்பிறகு நடந்த அறுவைசிகிச்சைக்கு Kims மருத்துவமனையில் இருந்து மருத்துவர்கள் வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியினுடைய மாமனார் ஒரு மந்திரியாகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார் என்றால் சரிதான். வாதி நிறுவனத்தினுடைய நிறுவன தலைவர் ஸ்ரீவித்யா என்பவராகும். அவர் சித்தார் வெசில்ஸ் நிறுவனத்தினுடைய தலைவர் ../

க. சுப்புராஜ் என்பவருடைய மகள் ஆவார். ஸ்ரீவித்யா என்னுடைய மனைவி ஆகும். என் மாமனாரும், பிரதிவாதியின் மாமனாரும் நீண்ட கால நண்பர்கள் என்றால் சரிதான். என் மாமனாரும் பிரதிவாதியின் மாமனாரும் சேர்ந்து ஒரு பெரிய மருத்துவமனையை திருச்சியில் ஆரம்பிக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் நிலம் வாங்கப்பட்டது என்று சொன்னால், என் மாமனாருக்கு நீண்ட காலமாக தென்தமிழகத்தில் ஒரு சிறந்த மருத்துவமனை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதையொட்டி பிரதிவாதி அதை நிறைவேற்றுவேன் என்று சொன்னதால், தில்லைநகரில் முப்பது படுக்கைக் கொண்ட மருத்துவமனை அமைக்கப்பட்டது. பெரிய மருத்துவமனை கட்டுவதற்கு ஏற்கனவே ஒரு இடம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் தற்போது மருத்துவமனை கட்டவில்லை என்றால் சரிதான். நாங்கள் பெரிய மருத்துவமனை கட்டுவோம் என்று, என் மாமனார் பிரதிவாதியின் மாமனாரிடம் சொன்ன அடிப்படையில்தான், பிரதிவாதி தான் வேலை பார்த்த அப்போலோ மருத்துவமனையை விட்டு எங்கள் மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான். ஆனால், அவர் அப்போலோ மருத்துவமனையில் வேலை பார்க்கவில்லை, ஸ்டான்லி மருத்துவமனையில்தான் வேலை பார்த்தார். அந்த சமயத்தில் ஸ்டான்லி மருத்துவமனைக்கு சுமார் ரூபாய் எட்டரை லட்சம் நன்கொடையாக வழங்கிதான் பிரதிவாதி ராஜினாமாவை ஏற்றுக்கொள்ள வைத்தோம். அதற்கான ஆவண சாட்சியம் உள்ளது, அதை எண்ணால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். அவ்வாறு ஒரு முக்கிய பொறுப்பில் பிரதிவாதி இருந்த காரணத்தினால்தான் பணம் கட்டி அழைத்துவந்தோம் என்றால்../

சரியல்ல. பணத்தை பிரதிவாதியின் வங்கிக்கணக்கின் மூலமாகதான் கொடுக்கப்பட்டது. எந்தவொரு பணமும் பிரதிவாதி ஸ்டான்லி மருத்துவக்கல்லூரிக்கு கட்டுவதற்காக வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்தில் சேர்வதற்கு முன்பாக, பிரதிவாதி அப்போலோ மருத்துவமனையில் மாதம் ரூபாய் ஐந்து லட்சம் சம்பளமாக பெற்று வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அதுமட்டுமில்லாமல், அவர் வேலை பார்த்து வந்த ஸ்டான்லி மருத்துவமனையிலும் சம்பளம் வாங்கிவந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் மாமனார் மற்றும் பிரதிவாதியின் மாமனார் இருவரின் விருப்பத்தின் பேரில் அவர்கள் கேட்டுக் கொண்டதின்பேரில்தான் பிரதிவாதி எங்கள் மருத்துவமனைக்கு வந்தார் என்று சொன்னால், என் மாமனாரின் ஆசையை அவர் நிறைவேற்றித்தருவதாக சொல்லிதான் வாதி நிறுவனத்திற்கு வந்தார். பிரதிவாதி எங்கள் மருத்துவமனையில் பணியில் இருந்தபொழுது, நிரந்தர மருத்துவர்கள் எத்தனை பேர் வேலை செய்தார்கள் என்றால், ஐந்து பேர் வேலை செய்திருப்பார்கள், எனக்கு ஞாபகமில்லை. அவர்களுடன் நாங்கள் ஒப்பந்தம் போட்டிருப்போம் என்றால் சரிதான். அதேபோல், பிரதிவாதிக்கும் சம்பளம் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் இருக்கும் என்றால் சரிதான். அதை நாங்கள் நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிக்கு மாதம் ஐந்து லட்சம் ரூபாய் சம்பளம் தருகிறோம் என்று சொல்லிதான் நாங்கள் அவரை அழைத்துவந்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு போடப்பட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால், பிரதிவாதிக்கு எவ்வளவு சம்பளம் என்று தெரியவரும் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்தவொரு ஒப்பந்தமும் சம்பளம் குறித்து போடவில்லை. வாதி நிறுவனத்திற்கு ../

வருடா வருடம் வருமான வரி பட்டியல் தாக்கல் செய்கிறோம் என்றால் சரிதான். அதில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு சம்பளம் எவ்வளவு என்பதை குறிப்பிடுவோம் என்றால் சரிதான். பிரதிவாதி, வாதி நிறுவனத்திற்கு ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்து நாலாயிரத்து நானூற்றி தொண்ணூற்று ஒன்பது தரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதி 05.08.2015, 10.12.2015, 18.03.2016, 19.03.2016 ஆகிய தேதிகளில் பணம் கடன் வாங்கினார் என்று தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது 2015-2016-க்கு நாங்கள் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு என்றால் சரிதான், அது பி.வா.சா.ஆ.1. அந்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் ஒரு கோடியே முப்பத்து நான்கு லட்சம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்லும் அந்த தொகை எந்த தலைப்பின் கீழ் சொல்லப்பட்டுள்ளது என்றால், Supplier என்ற தலைப்பின்கீழ் சொல்லப்பட்டுள்ளது. அந்த வருமான வரி கணக்கில் இயக்குநர்கள் கடன், பணியாளர்கள் கடன், இதரர்கள் கடன் என்று தனித்தனி தலைப்பில் தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பணியாளர் என்ற தலைப்பின்கீழ் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். NSK Builders என்ற நிறுவனத்தின் உரிமையாளர் N.S.கருணைராஜா, பிரதிவாதியின் மைத்துனர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடிதம் கம்பெனிகள் துறை அமைச்சகத்திலிருந்து எனக்கு வந்த கடிதம் என்றால் சரிதான். அந்த கடிதம் பி.வா.சா.ஆ.2. அந்த கடிதத்தில் சித்தார் வெசில்ஸ் ../

லிமிடெட் நிறுவனத்திடமிருந்து சித்தார் ஹெல்த் ஹேர் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் மாற்றம் செய்யப்பட்டது, அது பின்னர் சித்தார் ஹெல்த் ஹேர் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து NSK Builders என்ற நிறுவனத்திற்கு மாறியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால், NSK Builders க்கு அந்த பணத்தை கொடுக்கவில்லை. எம.சா.ஆ.2 கடிதத்திற்கு நான் பதில் கடிதம் எழுதியுள்ளேன், அந்த கடிதத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும், அதில் என்னுடைய விரிவான விளக்கத்தை தெரிவித்துள்ளேன். பி.வா.சா.ஆ.2. ஆவணத்தை தொடர்ந்து மற்றொரு கடிதம் அதே கம்பெனிகள் துறை அமைச்சகத்திலிருந்து 30.03.2021-ஆம் தேதி வந்தது என்றால் சரிதான், அந்த கடிதம் பி.வா.சா.ஆ.3. அந்த கடிதத்திற்கும் நான் பதில் கடிதம் கொடுத்துள்ளேன். 2013-2014 வருடத்திய வரவு செலவு சம்பந்தமானது என்பதால் அந்த ஆவணத்தைப் பார்த்து நான் என்ன பதில் கூறினேன் என்று சொல்ல முடியும். அந்த NSK Builders நிறுவனத்திற்கு நாங்கள் கொடுத்த தொகையை பிரதிவாதியிடம் பிரதிவாதிக்கு கொடுத்த தொகை என்று ஒப்புக்கொண்டு ஒரு கடிதம் அவரிடம் கேட்டோம் என்றாலும், அதை பிரதிவாதி கொடுக்க மறுத்த காரணத்தினால்தான் இந்த வழக்கை நாங்கள் பிரதிவாதிக்கு பாக்கி சம்பளத் தொகையை கொடுத்ததை வைத்து கடன் கொடுத்ததைப்போல் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2015-ஆம் ஆண்டு வரை பிரதிவாதி, வாதி கம்பெனியின் இயக்குநர் என்றால் சரிதான். கம்பெனியின் இயக்குநர் கம்பெனியிலிருந்து கடன் வாங்குவது என்றால், ஒரு கம்பெனியினுடைய இயக்குநர்கள் ../

கூட்டத்தை நடத்தி அதில் தீர்மானத்தை நிறைவேற்றித்தான் கொடுக்க முடியும் என்றால் சரிதான். 05.08.2015-ஆம் தேதி பிரதிவாதி தன்னுடைய சொந்த அவசர தேவைக்காக ஒரு கோடி ரூபாய் கடன் தேவைப்படுவதாக கேட்டபோது, அதுகுறித்து இயக்குநர்கள் கூட்டத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றினோமா என்றால், நிறைவேற்றியிருக்கலாம் சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதி அந்த சமயத்தில் எந்தவொரு கடனும் எங்கள் நிறுவனத்தில் வாங்காத காரணத்தினால், அவ்வாறு ஒரு தீர்மானம் போட வாய்ப்பே இல்லை என்றாலும், அதனால் அவ்வாறு ஒரு தீர்மானத்தை போட்டதாக சொல்வது உண்மைக்கு மாறானது என்று சொன்னால் சரியல்ல. வாதி நிறுவனம்தான் பிரதிவாதிக்கு ரூ.2,45,11,960/- பாக்கி வைத்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி ஒரு மகப்பேறு மருத்துவர் என்றால் சரிதான். அவர் செயற்கை கருத்தரிப்பு செய்வதில் நிபுணர் என்றால் சரிதான். பிரதிவாதியின் மனைவி 2013-ஆம் ஆண்டே இண்டியன் மெடிக்கல் அசோசியேசன் கட்டிடத்திற்கு அருகிலேயே மருத்துவமனை வைத்திருந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு, அவர் தில்லைநகர் 7-ஆவது கிராஸில் மருத்துவமனை வைத்தார் என்றால் சரிதான். அதனுடைய பெயர் Kims Hospital என்றால் சரிதான். பிரதிவாதியும் அவர் மனைவியும் பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கிதான் Kims மருத்துவமனையை ஆரம்பித்தார்கள் என்றாலும், நான் சொல்வதுபோல் எங்களிடம் கடன் வாங்கி ஆரம்பித்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் கடன் கொடுப்பதற்கு முன்போ அல்லது பின்போ அதுகுறித்து எழுத்துப்பூர்வமான ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால், ஒரு கடன் ஆவணத்தை எழுதி ../

பிரதிவாதியிடம் கொடுத்தோம், அவர் தொழில் செய்வதால் அவர் கடன் பத்திரம் எழுதிக்கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். கடன் எதுவும் பிரதிவாதி வாங்காதா காரணத்தினால்தான் கடன் ஆவணம் எதுவும் பிரதிவாதியிடம் இருந்து எழுதி வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2015-2016 ஆகிய ஆண்டுகளில் கடன் குறித்து எந்த கடிதப்பரிமாற்றமும் எங்களுக்குள் இல்லை என்றால் சரிதான். எங்களுக்குள் கடன் ஆவணம் எதுவும் காரணத்தினாலும், பிரதிவாதிக்கு கொடுத்த தொகைகள் அது அவருடைய சம்பள பாக்கி என்பதாலும் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், நாங்கள்தான் பிரதிவாதிக்கு மேலும் சம்பள பாக்கி தரவேண்டி உள்ளது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.04.06 17:22:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.